வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No.: P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 13.12.2025 சனிக்கிழமை | இதழ் : 347 | பக்கங்கள் : 08




# பேரிடரிலிருந்து மீள இலங்கை கோரிய 200 மில்லியன் டொலருக்கு முன்னுரிமை

## சர்வதேச நாணய நிதியம் தீர்மானம்

கொழும்பு, டிசெம்பர்.13

**'டித்வா' புயலால் ஏற்பட்ட அழிவைத் தொடர்ந்து ஏற்பட்ட சவால்களை எதிர்கொள்வதற்காக, அவசர நிதியிடல் வசதியின் கீழ் இலங்கை விடுத்த 200 மில்லியன் அமெரிக்க டொலர் கோரிக்கைக்கு முன்னுரிமை அளிக்க சர்வதேச நாணய நிதியம் தீர்மானித்துள்ளது.**

இந்த அவசர நிதியிடல் வசதியின் கீழான உதவிகள், இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதியிடல் வசதியின் கீழ் வழங்கப்படும் கடன் வசதிக்கு மேலதிகமாக வழங்கப்படும் நிதியிடல் வசதியாகும் என சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், விரிவாக்கப்பட்ட நிதியிடல் வசதியின் கீழ் நாட்டிற்கு கிடைக்கவுள்ள ஐந்தாவது மீளாய்வை நிறைவு செய்வதற்கான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக, 2026 ஆம் ஆண்டின் முற்பகுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

'டித்வா' புயலால் ஏற்பட்ட அழிவிலிருந்து நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்காக, இலங்கையினால் சுமார் 200 மில்லியன் அமெரிக்க டொலர் உடனடி நிதி உதவிக்கான அவசர கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததாகவும், அது தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டு வருவதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைவர் எவன் பப்பஜோர்ஜியோ கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# இந்திய மீனவர்கள் அத்துமீறலை கட்டுப்படுத்த கோரி போராட்டம்

## யாழ்ப்பாணத்தில் நேற்று முன்னெடுப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 13

இந்திய மீனவர்களின் சட்டவிரோத அத்துமீறலை கட்டுப்படுத்தக் கோரி நேற்று யாழ்.நகரில் போராட்டம் நடத்தப்பட்டது.

நேற்று காலை யாழ்ப்பாண மாவட்ட மீனவர்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்த போராட்டம் பண்ணை பகுதியில் உள்ள கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அலுவலகத்தின் முன்பாக ஆரம்பமாகி யாழ்ப்பாண மாவட்ட செயலகம் வரை இடம்பெற்றது.

இதன் போது, மாவட்ட அரசாங்க அதிபரிடம், மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து, இந்திய துணைத் தூதரம்,

07

# மாகாணத் தேர்தல் குறித்து ஆராய விசேட பாராளுமன்ற தெரிவுக் குழு

கொழும்பு, டிசெ. 13

மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்துவது என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட தெரிவுக் குழுவொன்றை நியமிப்பதற்கான யோசனை விரைவில் நிறைவேற்றப்படவுள்ளது.

சபை முதல்வரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த யோசனை பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கலப்பு தேர்தல் முறைமை, வாக்களிக்கும் உரிமை மற்றும் வெளிநாடுகளில் உள்ள

07

# மகாவலி அபிவிருத்தி திட்டத்துக்கு 200 மில்லியன் டொலர் கடன் உதவி

## ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குகிறது

கொழும்பு, டிசெ. 13

இலங்கையின் மிகப் பெரிய பல்நோக்கு நீர்வள அபிவிருத்தித் திட்டமான மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்காக, ஆசிய அபிவிருத்தி வங்கி 200 மில்லியன் டொலர் கடன் வசதியை அனுமதித்துள்ளது.

இந்த அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக மகாவலி ஆற்றின் மேலதிக நீரை இலங்கையின் வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களின் வறண்ட

07

# விபத்து ஏற்படுத்தினாரென கைதான முன்னாள் சபாநாயகருக்குப் பிணை!



கொழும்பு, டிசெ. 13

கைது செய்யப்பட்ட முன்னாள் சபாநாயகரும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான அசோக ரன்வலவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

அசோக ரன்வல, வீதி விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் பொலிஸாரினால் நேற்று கைது

07

# வடக்கு விவசாய உற்பத்திகளுக்கு உரிய விலை கிடைக்கவேண்டும்!

## ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து



யாழ்ப்பாணம், டிசெ. 13

விவசாயிகளுக்கு அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கப் பெறவேண்டும் என்பதுடன், அவர்கள் வெறும் உற்பத்தி யாளர்களாக மட்டும் நின்றுவிடாமல்

07

# நாட்டில் 30 வீத நிலப்பரப்பு மண் சரிவு அபாயத்தில்!

## 14 மாவட்டங்கள் அடையாளம்

கொழும்பு, டிசெ. 13

நாட்டில் தற்போது 14 மாவட்டங்களில் மண்சரிவுகள் ஏற்படக் கூடிய அபாயம் உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற காலநிலை மற்றும் அனர்த்த நிலைமை குறித்த ஊடக சந்திப்பில் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர பின்வரும் விடயங்களைக் கூறினார்.

07

# கிணற்றில் தவறி வீழ்ந்த பெண் ஒருவர் உயிரிழப்பு!

## அனலைதீவில் துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 13

அனலைதீவு பகுதியில் நீர் நிறைந்த கிணற்றில் தவறி வீழ்ந்து 56 வயதுடைய பெண்ணொருவர் பரிதாபமாக இறந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்றுக் காலை 5.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் உறவினரால் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில்

07

# மனித உரிமைக்குழுவின் தலையீட்டால் 18 வீடுகளை சுத்தப்படுத்த கொடுப்பனவு

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில்

யாழ்ப்பாணம், டிசெ. 13

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டையடுத்து வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வீட்டை சுத்தப்படுத்துவதற்கான 25,000 ரூபாய் கொடுப்பனவுக்கு 18 வீடுகள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன.

நவாலி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் வெள்ளநீர் வீட்டுக்குள் உட்புகுந்த வீட்டுக்கு அரசினால் வழங்கப் படும் 25,000 ரூபாய் நிவாரணம் வழங்கப்படாமை தொடர்பாக மனித உரிமைகள்

07

# இடரில் பாதிப்புற்ற சகலருக்கும் உரிய இழப்பீடுகள் மிகவிரைவில்

## வடக்கு மாகாண ஆளுநர் உறுதி

கிளிநொச்சி, டிசெ. 13

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உரிய இழப்பீடுகளும், வாழ்வாதார உதவிகளும் மிக விரைவில் உங்களை வந்து சேரும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலக திறன்விருத்தி மண்டபத்தில் நேற்று நடைபெற்ற உலக மண் தின நிகழ்வு மற்றும் "அறுவடை" சஞ்சிகை வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

07

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முசலி பிரதேச செயலாளருக்கு எதிராக மன்னார் அரசாங்க அதிபரிடம் மகஜர்!

மன்னார், டிசெ. 13

டித்வா புயலின் தாக்கம் காரணமாக மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவிலும் பாரிய பாதிப்புகள் ஏற்பட்டபோதும் முசலி பிரதேச செயலாளர் மக்களுக்கு உரிய பணியை முன்னெடுக்கவில்லை என்றும், இரவு பகல் பாராது கடமையை முன்னெடுத்த கிராம அலுவலர் ஒருவருக்கு எதிராக பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுத்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நேற்று முன் தினம் முசலி பிரதேச அமைப்புக்கள் இணைந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

டித்வா புயலின் தாக்கம் காரணமாக மன்னார் மாவட்டமும் பாதிக்கப்பட்ட நிலையில் மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பாரிய பாதிப்புகள் ஏற்பட்டது. முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வேப்பங்குளம், 4ஆம் கட்டை, மருதமடு, பிச்சைவானிபநெடுங்குளம் போன்ற கிராமங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டது.

குறித்த கிராமங்களுக்கு தேவையான உடனடி அடிப்படை தேவைகளை வழங்குவதில் முசலி பிரதேச செயலாளர் அசமந்தமாக செயற்பட்டமை தொடர்பில் மக்களால் சுட்டிக்காட்டப்பட்டு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிடம் குறித்த பிரதேச செயலாளருக்கு எதிராக வேப்பங்குளம் கிராம பள்ளி வாயில் நிர்வாகம், கிராம அபிவிருத்தி அமைப்பு, விவசாய அமைப்பு, இளைஞர் அமைப்பு என 10 இற்கும் மேற்பட்ட அமைப்புகள் இணைந்து நேற்று முன் தினம் மன்னார் மாவட்ட செயலகத்தில் வைத்து மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளித்துள்ளனர்.

குறித்த கிராமத்தின் கிராம அலுவலர் அனர்த்தம் ஏற்பட்ட தினத்தில் இருந்து இரவு பகலாக மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்ததுடன் குறித்த கிராம சேவகருக்கு தண்டனை இடமாற்றம் வழங்கப்பட்டமையை கண்டித்தும் அரசாங்க அதிபருக்கு தெளிவுபடுத்தியதுடன் மீண்டும் கிராம சேவகராக அவரையே தமது கிராமத்துக்கு கடமைக்கு அமர்த்துமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டதோடு தமது கோரிக்கை அடங்கிய மகஜரையும் கையளித்துள்ளனர். (அ)

# மலையகத் தமிழ் உறவுகளை வட, கிழக்குக்கு மிகுந்த பாசத்துடன் மனதார வரவேற்க தயார்!

## கூறுகின்றார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், டிசெ. 13

அண்மையில் கண்டி மற்றும் கம்பளைக்கு விஜயம் மேற்கொண்டபோது மலையகத்தில் இருந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வந்து குடியேறுமாறு எமது தமிழ் உறவுகளை அழைப்பதற்குத் தயாராகவே வந்தோம் எனத் தெரிவித்துள்ள தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், தற்போது மனோகணேசனும் மலையக மக்களும் அதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கும் நிலையில், அம்மக்களை மிகுந்த பாசத்துடன் மனதார வரவேற்பதற்குத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாத இறுதியில் ஏற்பட்ட "டித்வா" சூறாவளியை அடுத்து உருவான வெள்ளப்பெருக்கு, மண்சரிவு அனர்த்தங்களில் சிக்கி 600 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தும், நூற்றுக்கணக்கானோர் காணாமல்போயும், இலட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்தும், இன்னமும் முழுமையாக மதிப்பிடப்படாத பெருந்தொகை சொத்துக்கள் சேதமடைந்தும் நாடு பேரழிவுக்கு முகங்கொடுத்துள்ளது.

குறிப்பாக மலையக மக்கள் கடும் பாதிப்புக்களை எதிர்கொண்டிருக்கும் பின்னணியில், "மலையகத் தமிழர், மலையக மண்ணில்தான் வாழவேண்டும் என நானும் விரும்புகிறேன். ஆனால் பாதுகாப்பான காணி உரிமையை வழங்குவதற்கு மறுத்தால், எமது மக்கள் மலை மண்சரிவில் சிக்குண்டு தொடர்ச்சியாகப் பலியாவதா?" என்று கேள்வி எழுப்பியுள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், "எனவே மாற்று யோசனையாக வட, கிழக்கு மாகாணங்களில் புலம்பெயர்வினால் வெற்றிடங்களாகி காடாகிக்கொண்டிருக்கும் காணிகளை, அவற்றின் உரிமையாளர்கள் மனமுவந்து வழங்குவார்களாயின், அங்கு சென்று குடியேறி உழைத்து வாழ விரும்புகிறீர்களா என நான் சந்தித்த மக்களிடம் கேட்டேன்" எனத் தெரிவித்துள்ளார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் தனது உத்தியோக பூர்வ எக்ஸ் தளப் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், அப்பதிவில் கூறியிருப்பதாவது



உங்களுடன் கடந்த வாரம் கண்டி, கம்பளைக்குச் சென்றபோது மலையகத்தில் இருந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வந்து குடியேறுமாறு எமது தமிழ் உறவுகளை அழைப்பதற்குத் தயாராகவே வந்தோம்.

ஆனால் நீங்களும், அவர்களும் அதற்கான விருப்பத்தைத் தெரிவிக்கும் வரை பகிரங்கமாக அதனைச் சொல்வதைத் தவிர்த்திருந்தோம். இப்போது அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல, மக்களும் அதனை விரும்புவதாகச் சொல்கிறார்கள் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் உங்களை மிகுந்த பாசத்துடன் மனதார வரவேற்கிறோம். ஏற்கனவே எம்மில் பலர் தங்கள் சொந்த நிலங்களைக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளார்கள். அதே போன்று அரச காணிகளையும் வாழ்விடங்களுக்கும், பயிர்ச் செய்கை மற்றும் தோட்டம் போன்றவற்றுக்கும் பெற்றுத்தர எம்மாலான முயற்சிகளை செய்துகொடுப்போம்-எனத் தெரிவித்துள்ளார். (அ)

# முழுமையாகப் புனரமைக்கப்படவுள்ளது மானிப்பாய் கேளிமூலை !ஆம் ஒழுங்கை!



யாழ்ப்பாணம், டிசெ. 13

மக்களின் நீண்ட கால கோரிக்கைக்கு அமைவாக அனர்த்தம் காரணமாக அதிகம் பாதிக்கப்படும் மானிப்பாய் மேற்கு கேளிமூலை முதலாம் ஒழுங்கை முழுமையாக புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

பிரதேச சபையின் விசேட வட்டார நிதி மூலம் இந்த வேலைகள் ஒரு மில்லியன் பெறுமதியில் முன்னெடுக்கப்படவுள்ளன.

வரலாற்றில் முதல் தடவையாக இவ் வீதி அமைக்கப்படவுள்ளமை குறித்து ஊர் மக்கள் தமது மகிழ்வை வெளியிட்டனர்.

இதற்குரிய மூலப்பொருட்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஒப்பந்தகாரர் முன்னிலையில் அண்மையில் அளவீடு செய்யப்பட்டது.

தொடர்ச்சியாக நேற்றுக் காலை வட்டார மக்கள் பிரதிநிதி கலொக் கணநாதன் உஷாந்தன் தலைமையில் இடம்பெற்ற வீதி அமைப்புப் பணிகளின் ஆரம்ப நிகழ்வில் சபையின் தவிசாளர் ஜெசீதன், பிரதேச சபை உறுப்பினர்கள் பிரதேச மக்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (அ-05)

# உரையாடல் அரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 13

அண்மையில் வெளியாகிய " கலைமுகம்" கலை இலக்கிய சமூக இதழின் அமுத மலர் தொடர்பான உரையாடல் அரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு இல.286,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

நா.நவராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அமுத மலரில் வெளிவந்த சிறுகதைகள் பற்றி ரக்ஷானா ஷரிபுத்தீன், சி.விமலன் ஆகியோரும்,நேர்காணல், பத்தி பற்றி சி.ரகுராமும், கட்டுரைகள் பற்றி ந.குகபரன், தி.செல்வமனோகரன் ஆகியோரும், கவிதைகள் பற்றி சு.குணேஸ்வரனும் உரையாற்றவுள்ளனர்.

இதன்போது சிறப்புரையை "வாசிப்பு எனும் அசைவியக்கம் - பயிற்சிப் புத்தக பண்பாட்டில் கலை இலக்கிய சஞ்சிகைகள்" என்னும் பொருளில் பா.அகிலன் வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் கலைமுகம் இதழின் வாசகர்கள், படைப்பாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## மாணவன் செய்த முறைப்பாடு;
# விசாரணைகளை ஆரம்பித்த மனித உரிமை ஆணைக்குழு

யாழ்ப்பாணம், டிசெ. 13

அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வீட்டுக்கானதா அல்லது நபருக்கானதா என்ற விளக்கத்தை எழுத்து மூலமாக வழங்குமாறு, யாழ். சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் கோரியுள்ளது.

இரண்டு நாட்களுக்குள் எழுத்துமூலம் பதில் வழங்குமாறு கடிதம் அனுப்பியுள்ளது.

மாணவர் ஒருவர் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற 25000 ரூபாய் கொடுப்பனவுக்கு வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட தமது வீடு புறக்கணிக்கப்பட்டுவிட்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாட்டை பதிவு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம், விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (அ)

# இடரால் வவுனியா மாவட்டத்தில் 7739 ஏக்கர் நெற்செய்கை அழிவு!

வவுனியா, டிசெ. 13

வெள்ள அனர்த்தம் காரணமாக வவுனியா மாவட்டத்தில் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளமையால் தங்களது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்திலே ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக 7739.5 ஏக்கர் நெற்செய்கையானது அழிவடைந்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் இம்முறை பெரும்போக நெற்செய்கையானது 62 ஆயிரத்த 846.41 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்தது.

மாவட்டத்தின் வருட மழை வீழ்ச்சியில் 68 வீதமான மழை வீழ்ச்சியானது குறித்த நான்கு நாட்களில் பெறப்பட்டமையால் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளம் காரணமாக அனைத்து குளங்களும் வான் பாய்ந்திருந்தமையாலும், 124 குளங்கள் உடைப்பெடுத்திருந்தமையாலும் வயல் நிலங்கள் நீரில் மூழ்கி அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (அ)

# பேரிடரால் பாதிக்கப்பட்ட விலங்குகளுக்காக 3 நாள் நடமாடும் மருத்துவமனை மன்னாரில்!

மன்னார், டிசெ. 13

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பண்ணை விலங்குகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக, அரச கால்நடை மருத்துவர்கள் சங்கம் இன்று முதல் மூன்று நாள் நடமாடும் மருத்துவமனையை மன்னாரில் தொடங்கவுள்ளது.

அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரஞ்சித் குமார இதனைத் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கால்நடை வளர்ப்பாளர்களுக்கு உதவுவதே இந்த திட்டத்தின் நோக்கம் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தின்படி பாதிக்கப்பட்ட பண்ணைகளைக் கண்டறிய மன்னாரில் உள்ள பல்வேறு கிராமங்களுக்கு எட்டு குழுக்கள் அனுப்பப்படவுள்ளன.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட கால்நடை பண்ணையாளர்களுக்கு நிதி நிவாரணம் வழங்குவதற்கான சேத விவரங்களை உறுதிப்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்யும் பணிகள் மாகாண கால்நடை சுகாதார திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
13.12.2023 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# இந்திய தூதரகத்தை மூடிவிட்டால்?

தமிழ் நாட்டு மீனவர்கள் வடக்கு கடலினுள் அத்துமீறி மீன்பிடிப்பில் ஈடுபட்டுவருவது ஒரு நீண்ட காலப் பிரச்னை. இந்தப் பிரச்னை தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு தரப்பினராலும் பேசப்பட்டு வந்திருக்கின்றது. வடக்கு மீனவர்கள் அவ்வப்போது இது தொடர்பில் தங்களின் எதிர்ப்பை காண்பித்து வந்திருக்கின்றனர். இதன் தொடர்ச்சியாக நேற்றைய தினமும் தங்களின் எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றனர். கடந்த காலங்களில் இந்திய துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டும் தங்களின் எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றனர்.

இம்முறை இந்தியத் தூதரகத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டிருப்பதுடன், இந்திய தூதரகத்தை இல்லாமலாக்குவோம் என்றவாறு கடுமையாகவும் பேசியிருக்கின்றனர். அவர்கள் அறிந்து பேசுகின்றனரா அல்லது தவறான வழிகாட்டுதல்களினால் அவ்வாறு பேசுகின்றனரா என்பது கவனிக்க வேண்டியது. இந்தியத் துணைத் தூதரத்தை யாழ்ப்பாணத்தில் மூடிவிட்டால் எவ்வாறு பிரச்னை தீரும்? அதே வேளை அத்துமீறுகின்ற தமிழ் நாட்டு மீனவர்களை இலங்கை துப்பாக்கிப் பிரயோகம் செய்து கட்டுப் படுத்த வேண்டும். அதனை இந்தியா தடுக்கக் கூடாது என்றும் அவர்கள் கூறியிருக்கின்றனர்.

இதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு குந்தகம் விளைவிப்பவர்களை எவ்வாறேனும் தடுக்க வேண்டும் என்பதே அவர்களுடைய வாதமாக இருக்கின்றது. வடக்கு மீனவர்களின் வாழ்வாதார கண்ணோட்டத்தில் நோக்கினால் அவர்களின் ஆதங்கத்தில் நியாயமுண்டு. இதனை மனிதநேய கண்ணோட்டத்தில் நோக்க வேண்டும் என்று இந்திய மத்திய அரசு கூறிவருகின்றது.

ஆனால் தமிழ் நாடு அரசாங்கமோ வடக்கு மாகாண மீனவர்களின் வர்வாதாரத்தை மனிதய நேயத்துடன் அணுகவில்லை கருத்தில் கொண்டு இதுவரையில் செயற்பட்டதில்லை. அத்துமீறி மீன்பிடிப்பில் ஈடுபடும் தமிழ் நாட்டு மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்கின்ற போது, அதில் தலையீடு செய்யுமாறு தமிழ் நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின் உடனடியாக மத்திய அரசிற்கு கடிதம் எழுதுகின்றார். ஆனால் இதுவரையில் தமிழ் நாட்டு மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பில் ஈடுபடுவது தொடர்பில் அவர் எதுவும் பேசியதில்லை. இதற்கு பின்னாலுள்ள காரணம் என்ன?

வடக்கு மாகாண மீனவர்களும் அவர்களுக்காக பேசுகின்ற வடபுல தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளும் இந்திய மத்திய அரசை நோக்கியே பேசிவருகின்றனர். ஆனால் வடக்கு கடலினுள் பிரவேசித்து மீன்பிடித்தில் ஈடுபடுவர்கள் எவரும் வடஇந்தியர்கள் அல்லர் மாறாக அனைவருமே தமிழ் நாட்டு மீனவர்கள். அவர்களை அனுப்பும் முதலாளிகள் அனைவருமே தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். இதனை கட்டுப்படுத்த வேண்டிய அதிகாரத்தில் இருப்பவர்களும் தமிழ் நாட்டு அரசாங்கம்.

நிலைமை இவ்வாறு இருக்கின்றபோது, வடபுல மீனவர்கள் தமிழ் நாட்டு அரசாங்கத்தை நோக்கி குரல் எழுப்பாமல் ஏன் மத்திய அரசை நோக்கி குரலெழுப்பி வருகின்றனர். வடக்கு மாகாண மீனவர் சங்கங்கள் இந்த விடயத்தில் தெளிவான நிலைப்பாட்டுடன் இருந்தால்தான், ஈழத் தமிழர் அரசியலை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறிக்கொள்ளும் தலைமைகளும் தெளிவாக செயற்படுவார்கள். தாங்கள் பாதிக்கப்படுவதாக கருதுபவர்கள் முதலில் தாங்கள் யாரால் பாதிக்கப்படுகின்றோம் என்பதில் தெளிவான புரிதல் இருக்க வேண்டும். அவ்வாறில்லாது அவ்வப்போது தெருவில் நின்று சத்தம் போடுவதால் எதனையும் சாதிக்க முடியாது. இந்திய தூதரகத்தை மூடிவிடுவதால் பிரச்னைகள் தீரப் போவதில்லை ஏனெனில் பிரச்னை அந்தத் தூதரகத்தின் எல்லைக்குள் இல்லை. பிரச்னை இருப்பதோ தமிழ் நாட்டில்.

# 'இலங்கை தினம்' தேசிய திட்டம் ஒத்திவைப்பு!

கொழும்பு, டிசெ. 13

டிசெம்பர் 12 முதல் 14 வரை நடைபெறவிருந்த 'இலங்கை தினம்' என்ற தேசிய திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடுமையான சூறாவளி பேரழிவு மற்றும் நாடு முழுவதும் நடைபெற்று வரும் மீட்பு முயற்சிகளைக் கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபை மைதானம், விகாரமஹா தேவி பூங்கா மற்றும் அதனை சுற்றியுள்ள பிரதான வீதிகள் வழியாக நடைபெறவிருந்த இந்த நிகழ்வு, பொது, தனியார் துறைகளின் பங்கேற்புடன் நான்கு மண்டலங்களைக் கொண்ட ஒரு பெரிய அளவிலான தேசிய கொண்டாட்டமாக வடிவமைக்கப்பட்டது. சமூகங்களிடையே புரிந்துணர்வை வளர்ப்பதற்கும், மிகவும் இணக்கமான இலங்கையை உருவாக்குவதற்கும், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதியால் 2025 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில் இது முன்மொழியப்பட்டது.

இலங்கையின் பல்லின கலாசார அடையாளத்தை எடுத்துக்காட்டும் வகையில் வடிவமைக்கப்பட்ட இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யும் பொறுப்பு புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது.

மாவட்ட அளவிலான உணவு கலாசாரங்கள், பாரம்பரிய கலைகள், உள்ளூர் தொழில்களின் கண்காட்சிகள், விற்பனை நிலையங்கள் மற்றும் புதிய தயாரிப்பு வாய்ப்புகளை அறிமுகப்படுத்துதல் ஆகியவை திட்டங்களில் அடங்கும். திட்டத்தை தொடர கடந்த ஒக்ரோபரில் அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டது.

எனினும், ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ள நிலையில், முக்கியமான உள்கட்டமைப்பு சேதமடைந்துள்ள நிலையில், டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட பல மாவட்டங்களில் அவசர சேவைகள் தொடர்ந்து செயல்பட்டு வரும் நிலையில், நாடு தழுவிய கலாச்சார விழாவை நடத்துவது பொருத்தமானதல்ல என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (அ)

## மீண்டும் நிரம்பி வழியும் நீர்த்தேக்கங்கள்!

கொழும்பு, டிசெ. 13

பல ஆற்றுப் படுகைகளில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் (நீரியல்)பொறியாளர் எல்.எஸ். சூரியபண்டார தெரிவித்தார்.

ஜின் கங்கை, களு கங்கை, களனி கங்கை மற்றும் யான் ஓயா படுகைகளின் மேல் பகுதிகளிலும், மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் 50 மில்லி மீற்றருக்கு அருகில் மழை பெய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனால், சில ஆறுகளில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது, இருப்பினும் அவை வெள்ள மட்டத்துக்கு கீழே உள்ளது என்றும் கூறினார்.

இதனால், சுமார் 34 முக்கிய நீர்த்தேக்கங்கள் தற்போது நிரம்பி வழிகின்றன.

அதன்படி, தெதுரு ஓயா, ராஜாங்கனை, நாச்சதுவ, யான் ஓயா, பதவிய, லுனுகம்வெஹெர மற்றும் சேனநாயக்க சமுத்திரம் நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டு நீர் மட்டங்களைக் குறைக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். (அ)

## பல பகுதிகளில் மண்சரிவு அபாயம்!

கொழும்பு, டிசெ. 13

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட அனர்த்த நிலை நீங்கி ஒரு வார காலமாகியுள்ள போதிலும், சில பகுதிகளில் மண்சரிவுகள் மீண்டும் தீவிரமடையும் சம்பவங்கள் இன்னும் பதிவாகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமான தெமோதரை கண்காணிப்பு மேடைகளைக் கொண்ட மலை, மண்சரிவு அபாயத்தை எதிர்கொண்டுள்ளது.

அத்துடன், மலையேற்றத்திற்குப் பிரபலமான ஹாலி - எல - நாரங்கல போன்ற பகுதிகளிலும் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

பதுளை மாவட்டத்தில் தெமோதரை கண்காணிப்பு மேடை மலையைத் தவிர, பதுளை மாவட்டத்தில் மட்டும் புதிதாக 4 மண்சரிவு இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாரங்கல பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாகப் பல தோட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

அங்கிருந்த மக்கள் தற்போது பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அங்கு மண் சரிவுகள் இன்னும் முடிவடையாததால், தங்களுக்கு நிரந்தரமாகப் பொருத்தமானதொரு இடத்தைப் பெற்றுக் கொடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஹாலி-எல - போகமலித்த பிரதேசத்தில் உள்ள சில கிராமங்களுக்கு மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதோடு, சில இடங்களில் நிலம் உள்வாங்கியும் நீரூற்றுகள் தோன்றியும் உள்ளன. (அ)


## மதுபான உரிம கட்டணங்கள் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 13

நேற்று முதல் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அனைத்து மதுபான உரிமக் கட்டணங்களும் 100 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இது கடந்த 5 ஆம் திகதி ஜனாதிபதியால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவின்படி உள்ளது. ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் கையொப்பத்துடன் தொடர்புடைய வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப் பட்டுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசெம்பர் - 13 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - கார்த்திகை 27

| | | | |
|---|---|---|---|
| நல்ல நேரம் | : | 07.31 - 09.00 | |
| ராகு காலம் | : | 09.00 - 10.30 | |
| திதி | : | நவமி | |




**மேடம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**இடபம்**
நட்பு வட்டம் விரியும். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**மிதுனம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். பழைய இனிய சம்பவங்கள் அனைத்தும் நினைவுக்கு வரும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். தேவைகள் பூர்த்தியாகும்.

**கடகம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**சிம்மம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய பாதை தெரியும்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**துலாம்**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். வாகனத்தை இயக்கும்போது அலைபேசியில் பேச வேண்டாம். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். விவாதம் வரக்கூடும் நாள்.

**விருட்சிகம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல்கள் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**தனுசு**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். நீண்ட நாள் ஆசையில் நிறைவேறும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். சாதிக்கும் நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்கள் அறியாமலே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவை.

**மீனம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

# மகாகவி பாரதியாரின் சிந்தனைகள் இன்னும் செயல்வடிவம் பெறவில்லை

**வடமாகாண ஆளுநர் வேதநாயகன் கவலை**

யாழ்ப்பாணம், டிசெ. 13

மகாகவி பாரதியார் நூற்றாண்டுக்கு முன்பே விதைத்துச் சென்ற முற்போக்குச் சிந்தனைகள், இன்றும் எமது சமூகத்தில் முழுமையான செயல்வடிவம் பெறவில்லை என்பதே நிதர்சனம் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் ஜனன தின நிகழ்வு, யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.


இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"டித்வா பேரிடரால் எமது மாகாணம் பாதிக்கப்பட்டுள்ள இக்கட்டான சூழலில், இந்த நிகழ்வு மிகவும் எளிமையான முறையில் முன்னெடுக்கப்படுகின்றது. இந்தத் தருணத்தில், வடக்கு மாகாண மக்கள் சார்பாக இந்திய அரசாங்கத்துக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது மக்கள் அனர்த்தத்தைச் சந்தித்தபோது, மீட்புப் பணிகள் மற்றும் நிவாரண உதவிகள் எனப் பல்வேறு விடயங்களில் முதலாவது நாடாக இந்தியா எமக்குக் கரம் கொடுத்திருக்கின்றது. அந்த உதவியை நாம் என்றும் நினைவில் கொள்வோம்.

பாரதியார் இந்தியாவில் பிறந்திருந்தாலும், தமிழுக்கு அவர் ஆற்றிய அளப்பரிய சேவையானது அவரை ஒரு பிராந்தியக் கவிஞராக அல்லாமல், உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் ஓர் ஆளுமையாக மாற்றியிருக்கிறது. எமது சிறுபராயத்தில் பேச்சுப் போட்டிகள் என்றால், பாரதியார் இல்லாத தலைப்புகளே இருக்காது என்னும் அளவுக்கு அவர் எம்முடன் ஒன்றிப்போயுள்ளார்.

நூற்றாண்டுகளுக்கு முன்னரே சமூக மாற்றத்துக்கான முற்போக்குச் சிந்தனைகளைத் துணிவுடன் விதைத்தவர் பாரதியார். அவர் ஒரு சிறந்த கவிஞராக மட்டுமல்லாமல், இந்திய தேச விடுதலைக் காகத் தன்னை அர்ப்பணித்த ஒரு போராளியாகவும் திகழ்ந்தார். தனது கனல்தெறிக்கும் பாடல்கள் மூலம் மக்களிடத்தில் தேசபக்தியையும், விடுதலை உணர்வையும் ஊட்டினார்.

பல மொழிகளைக் கற்றறிந்த பன்மொழிப் புலவராகத் திகழ்ந்த அவர், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" எனத் தமிழுக்கு மகுடம் சூட்டினார். இவ்வுலகில் அவர் வாழ்ந்தது குறுகிய காலமே என்றாலும், அவர் ஆற்றிய பணிகள் மகத்தானவை. அதனால்தான் நூற்றாண்டு கடந்தும் அவர் இன்றும் நம்மால் போற்றப்படுகின்றார்"-என்றார். (எ)





மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் ஜனன தின நிகழ்வு, யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. யாழ். இந்தியத் துணைத்தூதுவர் சிறீ சாய்முரளி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், யாழ். தமிழ்ச் சங்கத்தின் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள், இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் பலர் கலந்துகொண்டனர். (படங்கள்: - சுஜிந்தன்)

# வவுனியாவில் சேதமடைந்த ரயில் பாதைகளை பார்வையிட்ட நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர்

வவுனியா, டிசெ. 13

வவுனியாவில் சேதமடைந்த ரயில் பாதைகளை நேற்று முன்தினம் நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர் ஏரங்க குணவர்த்தன பார்வையிட்டிருந்தார்.

நொச்சிமோட்டை பகுதியில் ஏற்பட்ட கடும் வெள்ளம் காரணமாக அப்பகுதியில் இருந்த ரயில் பாதை கடுமையாக சேதமடைந்தது.

தற்போது குறித்த பாதையை செப்பனிடும் பணிகளை இராணுவத்தினரின் உதவியுடன் ரயில் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் சுமார் 125 மீற்றர் நீளமான சேதமடைந்த ரயில் பாதையை செப்பனிடும் பணிகளை நேற்று முன்தினம் நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர் ஏரங்க குணவர்த்தன பார்வையிட்டிருந்தார். (எ-10)

# தையிட்டி மக்களை அரசியல் இலாபத்துக்காக தவறாக வழிநடத்துகிறார் அர்ச்சுனா எம். பி.

யாழ்ப்பாணம், டிசெ. 13

தையிட்டி மக்களுடைய போராட்டத்தை பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தன்னுடைய அரசியல் இலாபத்துக்காக பாவிக்கின்றார் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

தையிட்டி சட்டவிரோத விகாரையை அகற்றுவதற்காக மக்கள் போராடிக் கொண்டிருக்கும் வேளை, அவர்களின் உணர்வுகளை மதிக்காமல் பொலிஸார் அராஜகமாக நடந்து கொள்வதாக வடமாகாண காணி உரிமைக்கான மக்கள் அமைப்பின் தலைவர் இ. முரளிதரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"தையிட்டி விகாரை அமைந்துள்ள பகுதி 18 பேருக்கு சொந்தமான காணி.

அந்தக் காணிக்கு உரித்தானவர்கள் வடபகுதியில் தற்போதும் இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு உட்பட தையிட்டி காணிக்கு சொந்தமான 18 பேர் இலங்கையில் உறுதியோடு இருக்கிறார்கள்.

தையிட்டி காணிக்குரிய மக்களை கொழும்புக்கு அழைத்து சென்று, பௌத்த விவகார அமைச்சரை சந்தித்து பேசினோம். மக்கள் தங்களுடைய நிலைப்பாட்டை எடுத்துக் கூறினர். மக்களுடைய காணி மக்களுக்கு விடுவிக்கப்பட வேண்டும் என்பதில் அமைச்சரும் ஒப்புக்கொண்டார்.

ஆனால், இதுவரை காணி விடுவிக்கப்படவில்லை. தங்களுடைய காணியை மீட்பதற்காக போராட்டம் நடத்தும் மக்களை பொலிஸார் விரட்டுகிறார்கள்.

இந்த நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, குறிப்பிட்ட நான்கு பேரை விகாரைக்குள் அழைத்து சென்று அந்த விகாராதிபதியை சந்தித்தபின் காணி பெற்றுக் கொடுப்பதாக கூறியுள்ளார்.

காணிக்கான நான்கு நபர்களை நீங்கள் அழைத்துச் சென்றதை நான் வரவேற்கிறேன். ஆனால், காணிக்கான உரிமையாளர்கள் இன்னும் 14 பேர் வெளியில் இருக்கிறார்கள்

வெளியில் இருக்கும் அந்த 14 பேருக்கும் காணிக்கான உறுதி இருக்கின்றது

ஏன் அவர்களை நீங்கள் விட்டுவிட்டு நான்கு பேரை மட்டும் அழைத்துச் சென்று விகாராதிபதியை சந்தித்தீர்கள்? காரணம் என்ன?

தையிட்டி மக்களுடைய போராட்டத்தை இராமநாதன் அர்ச்சுனா, தன்னுடைய அரசியல் இலாபத்துக்காக பாவிக்கின்றார்.

அரசாங்கத்தினதும் பொலிஸாரினதும் அராஜகத்துக்கு எதிராக காணிக்கான மக்கள் உரிமை அமைப்பு வெகு விரைவில் மிகப்பெரிய போராட்டங்களை செய்ய வேண்டிய தேவைக்குள் தள்ளப்படும்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரிடரால் மேல் மாகாணத்தில் 40 ஆயிரம் தொன் குப்பைகள்!

கொழும்பு, டிசெ. 13

**பேரிடரால் மேல் மாகாணத்தில் மாத்திரம் சுமார் 40 ஆயிரம் மெற்றிக் தொன் குப்பைகள் குவிந்துள்ளன.**

கொடிகாவத்தை, முல்லேரியா, கொலன்னாவை, கடுவலை ஆகிய உள்ளூராட்சி பிரதேசங்களில் அதிகளவு குப்பைகள் குவிந்துள்ளன என்று மேல் மாகாண கழிவு முகாமைத்துவ அதிகார சபையின் தலைவர் சதுரு கஹந்தவ ஆராச்சி தெரிவித்தார்.

இருப்பினும், இன்னும் சிறிய அளவிலான குப்பைகள் அகற்றப்பட வேண்டியுள்ளதாக அவர் கூறினார். மேலும், பேரிடரால் அதிகம் பாதிக்கப்பட்ட கம்பளை நகரில் 400 மெற்றிக் தொனுக்கும் அதிகமான குப்பைகள் குவிந்துள்ளன என்றும் கூறினார். (ஐ)

# காதலிகளுக்கு பரிசளிக்க திருட்டில் ஈடுபட்டவர் கைது

கொழும்பு, டிசெ. 13

தனது காதலிகளுக்கு பரிசுகளை வழங்கவும் ஒன்லைனில் பணத்தை முதலீடு செய்யவும் திருட்டில் ஈடுபட்ட 18 வயது இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள பல்பொருள் அங்காடியொன்றில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டபோது, உறவினர் ஒருவரின் வீட்டில் இருந்து திருடப்பட்ட 61 இரத்தினகற்கள் அவர் வசம் இருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட பணத்தை பயன்படுத்தி 27 வயதான மூன்று குழந்தைகளின் தாயான பெண்ணுக்கும், ரிக்ரொக் மூலம் அறிமுகமான மேலும் காதலிகள் இருவருக்கும் கைபேசிகள் வாங்கி வழங்கியதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அர்ஜூன மகேந்திரனுக்கு மீளவும் திறந்த பிடியாணை

கொழும்பு, டிசெ. 13

பணச்சலவை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன், அஜான் கார்திய புஞ்சிஹேவா ஆகியோரை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு மீண்டும் திறந்த பிடியாணை பிறப்பித்துள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ். போதரகம் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள ப்பட்டபோது, பெர்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் ஐந்து அதிகாரிகள் நீதிமன்றில் வருகை தந்திருந்தனர். எனினும், முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் மற்றும் அஜான் புஞ்சிஹேவா வருகை தராததால் அவர்களுக்கு மீண்டும் திறந்த பிடியாணை வழங்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட விசாரணைகளை விரைவில் நிறைவு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு மீண்டும் மே 21ஆம் தேதி விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இணையவழியில் பணமோசடி; சந்தேகநபர் ஒருவர் கைதானார்

கொழும்பு, டிசெ. 13

இணையவழியில் பணமோசடி செய்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் வடமேல் மாகாண துணைப் பிரிவினருக்கு கிடைத்த முறைப்பாட்டிற்கமைய நேற்று முன்தினம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

ரெலிகிராம் குழு ஒன்றுடன் இணைத்து 68 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மோசடி செய்துள்ளதுடன், அதில் 5 இலட்சம் ரூபாயை சந்தேகநபர் தனது வங்கிக் கணக்குக்கு மாற்றியுள்ளார்.

சந்தேகநபர் களுத்துறை - வெலிபென்ன பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஐ)

# போதைப்பொருள் மூலம் ஈட்டப்பட்ட பல கோடி ரூபாய் சொத்துகள் முடக்கம்!

கொழும்பு, டிசெ. 13

போதைப்பொருள் கடத்தல் மூலம் ஈட்டப்பட்டதாகக் கூறப்படும் நபர் ஒருவரின் பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன.

மொனராகலை - தனமல்வில, ஹம்பேகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயது நபர் ஒருவரின் சொத்துகளே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் போதைப்பொருள் சார்ந்த குற்றங்கள் தொடர்பில் பலமுறை கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் போதைப்பொருள் கடத்தல், விற்பனை மூலமாக ஈட்டிய பணம் மூலமாக அவரின் மனைவியின் பெயரில் பல சொத்துகளை வாங்கியுள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. இதற்கமைவாக அவரின் சொத்துகள் நேற்று முன்தினம் முதல் 7 நாட்களுக்கு முடக்கப்பட்டுள்ளன.

எம்பிலிபிட்டியில் 3 கோடி ரூபாய் மதிப்புள்ள மருந்தகம், 7 கோடி ரூபாய் மதிப்புள்ள வெற்றுக் காணி, விருந்தகம் மித்தெனியவில் 1.5 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு காணி மற்றும் இரு கடைகள், 75 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள காணி மற்றும் கடை, 75 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மற்றொரு காணி, கடை, எம்பிலிப்பிட்டி - கீரவலகட்டுவவில் 3.5 கோடி ரூபாய் மதிப்புள்ள 25 பேர்ச் காணி, இரு மாடி வீடு, மித்தெனிய, பனமுர வீதியில் ரூபாய் 1.5 கோடி மதிப்பில் உள்ள இரு -மாடி வணிகக் கட்டடம் ஆகியவையே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளன என்று அறிய வருகிறது. (ஐ)

# 5 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் வாங்கிய பொலிஸார் கைது

கொழும்பு, டிசெ. 13

5 ஆயிரம் ரூபாயை இலஞ்சமாக கோரிய பொலிஸ் கான்ஸ்டபிள், சார்ஜன்ட் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலநறுவை - அத்தனகடவல பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே நேற்று முன்தினம் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான இருவரும் தியபெதும பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவில் பணியாற்றுவோரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியவரின் ஆவணங்களை பறிமுதல் செய்த இருவரும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தாமல் அவற்றை மீள வழங்க 5 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் கோரினர் என்றும் இது தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு அதிகாரிகளால் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிய வருகிறது.

# போதைப்பொருட்களுடன் 861 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, டிசெ. 13

நாடு முழுவதும் போதைப்பொருளை தடுக்கும் "முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் 861 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இவர்களிடமிருந்து 311 கிராம் ஹெரோயின், 758 கிராம் ஐஸ், 93 கிலோ 12 கிராம் கஞ்சா, 40 ஆயிரத்து 874 கஞ்சா செடிகள், 29 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 27 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 72 கிராம் மதனமோதகம், 301 போதை மாத்திரைகள் மற்றும் 813 கிராம் மாவா போன்ற போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்களில் 11 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட போதைப்பொருள் சார் குற்றங்களுடன் தொடர்புடையவர்களாவர். 26 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக தமிழர்களை வடகிழக்கில் குடியமர்த்த எந்த தடையும் இல்லை

## அரியநேத்திரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, டிசெ. 13

மலையக தமிழ் உறவுகளை வடகிழக்கில் குடியமர்த்துவதே அவர்களின் உயிருக்கு உத்தரவாதம். நாட்டில் நிலவிய டித்வா புயல் தாக்கத்தால் மலையகத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் மலையகத்தில் மக்கள் நிரந்தரமாக வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களை வடகிழக்கில் பொருத்தமான இடத்தில் குடியமர்த்தும் வேலைத் திட்டத்தை 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்கனவே மலையக மக்கள் பல இடங்களில் குடியேறி வாழ்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் மலையக மக்களை குடியமர்த்த மாவட்ட மக்கள் எவருமே தடையில்லை. அதுபோல் வடமாகாணத்தில் ஏற்கனவே கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் ஏனைய இடங்களிலும் மலையக மக்கள் வாழ்கின்றனர். - என்றார்.

மலையக மக்கள் வடகிழக்கில் குடியேறுவதற்கு விரும்பியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். மலையக மக்களின் உயிரை காப்பாற்றுவதே இன்று சகல அரசியல் தலைவர்களுக்கும் முக்கியமான செயல் என்பதை உணர்ந்து மண்சரிவு இனங்காணப்பட்ட இடங்களில் உள்ள மலையக மக்கள் உயிர்வாழ பாதுகாப்பான இடம் வடகிழக்கு மட்டுமே எனவும் அவர் கூறினார்.

இந்த நிலையில் தான், மலையக தமிழர்களை வடகிழக்கில் குடியமர்த்த எந்த தடையும் இல்லை என்று ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் அரியநேத்திரன் குறிப்பிட்டுள்ளார்.

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட

# கால்நடை பண்ணையாளர்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

திருகோணமலை, டிசெ. 13

டித்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட கால்நடை பண்ணையாளர்கள் உரிய பிரிவு கால்நடை வைத்தியர் அல்லது கால்நடை அபிவிருத்தி போதனாசிரியரிடத்தில் பதிவு செய்யுமாறு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் எம். சுல்பிகார் அபூபக்கர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நவம்பர் மாதம் ஏற்பட்ட டித்வா புயல் அனர்த்த நிலைமையால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண கால்நடை பண்ணையாளர்களுக்கு வரவு- செலவுத் திட்ட சுற்று நிரூபத்தின் பிரகாரம் நிதி நிவாரணம் வழங்குவதற்கான சேத விவரங்களை உறுதிப்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்யும் பணிகள் கிழக்கு மாகாண கால்நடை சுகாதார திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து கால்நடை பண்ணையாளர்களுக்கும் இது பொருந்தும்.

கால்நடை பண்ணை, கட்டடங்கள், உபகரணங்கள் போன்ற சேத விவரங்களுடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

குறித்த விவரங்களை இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அருகில் உள்ள அரச கால்நடை வைத்திய அதிகாரி அல்லது கால்நடை அபிவிருத்தி போதனாசிரியரிடத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-12)



# கண்டி மாவட்ட வீதிகளில் குவியும் பழுதடைந்த உணவு பொருட்கள்

கண்டி, டிசெ. 13

கண்டி மாவட்டத்தில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக பல கோடி ரூபாய் பெறுமதியான பழுதடைந்த உணவுப் பொருட்கள் கம்பளை, கெலிஓயா, கஹட்டபிட்டிய முதலான பகுதிகளில் உள்ள பிரதான வீதிகளில் குவிந்துள்ளன.

அவற்றை அகற்றுவது கூட பாரிய சிரமமாக உள்ளதாக தெரியவருகிறது.

பல்லாயிரக்கணக்கான தொன்கள் எடை கொண்ட இப்பொருட்களை எங்கு எடுத்துச் செல்வது? எங்கே? கொட்டுவது என்பன கூட பாரிய சவாலாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அரிசி, மா, பருப்பு, வெங்காயம், மருந்துப் பொருட்கள், கட்டடப் பொருட்கள், ஆடை அணிகள், வீட்டுத்தளபாடங்கள் என விதம் விதமான பொருட்கள் பழுதடைந்து வீதிகளில் குவிந்து காணப்படுகின்றன.

(எ)

# நுவரெலியா செல்லும் வீதிகளில் இரவு நேரம் பயணிக்க வேண்டாம்

நுவரெலியா, டிசெ. 13

நுவரெலியாவுக்குச் செல்லும் எந்தவொரு வீதியிலும் இரவு நேரங்களில் வாகனங்களை செலுத்தாதிருக்க வாகன சாரதிகளை நுவரெலியா மாவட்ட செயலாளர் துஷாரி தென்னக்கோன் அறிவுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கம்பளை - நுவரெலியா பிரதான வீதியின் கட்டுகிந்துல பகுதியிலிருந்து போக்குவரத்துக்கு திறக்கப்பட்ட பிரதான வீதியில் மண்மேடு சரிந்து விழுந்துள்ளது.

நிலவும் வானிலை காரணமாக வீதிகளில் மேலும் மண்மேடுகள் சரிந்து விழும் அபாயம் உள்ளதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் டித்வா "சூறாவளியால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் உணவுப் பொருட்கள் உட்பட தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தை சங்கடப்படுத்தும் நோக்கில் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படாத சிலர் கூறும் சில அறிக்கைகளில் எந்த உண்மையும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# விவசாய நிலங்களை மூடிய மணலை அகற்ற உதவுங்கள்

## திருமலை- நீலாபொல விவசாயிகள்

திருகோணமலை, டிசெ. 13

டித்வா புயல் மற்றும் மழை வெள்ளம் என்பனவற்றால் திருகோணமலை நீலாபொல பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் மணலால் முழுமையாக மூடப்பட்டு கடற்கரை போல் மாறியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

நீலாபொல பகுதியில் மகாவலி ஆற்றின் அணைக்கட்டு உடைந்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக அதனை அண்டிய பகுதியில் உள்ள 80 ஏக்கருக்கு மேற்பட்ட வயல்நிலங்கள் மணலால் நிரம்பியுள்ளன.

வயல் நிலங்களுக்குள் கிட்டத்தட்ட 3 அடிக்கு மேல் மணல் மூடியிருப்பதாகவும் இதனால் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மணலை அகற்றுவதற்கு பாரிய செலவு ஏற்படும் எனவும் விவசாயிகள் கூறினர்.

எனவே, மணலை அகற்றுவதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அல்லது விசேட கொடுப்பனவுகள் வழங்கியாவது குறித்த மணலை அகழ்ந்து அகற்ற வேண்டும். இதன் மூலமே மீளவும் இந்த நிலத்தில் விவசாயம் செய்யக் கூடிய நிலைமை ஏற்படும். கமநல சேவைகள் திணைக்களம் உள்ளிட்ட அரச திணைக்களங்கள் இதற்கான உதவிகளை எமக்கு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து திருகோணமலை மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் விஷ்ணுதாசனிடம் வினவியபோது "வயல் காணியில் இருந்து மண்ணை அகழ்வதற்கு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் அனுமதியுடன் காணி உரிமையாளருக்கு அனுமதி வழங்கப்படும். அகழும் செலவை மணலை விற்பனை செய்வதன் மூலம் விவசாயிகள் ஈடு செய்து கொள்ள முடியும். தற்போது வீதிகள் சேதமடைந்திருப்பதால் சிறிது தாமதித்து அடுத்த போகத்துக்கு முன்னர் மணல் அகழும் நடவடிக்கையை இலகுவாக மேற்கொள்ள முடியும்"- என அவர் தெரிவித்தார். (எ)

# மூதூரில் மழை, வெள்ளத்தால் செங்கல் சூளைகள் பாதிப்பு

திருகோணமலை, டிசெ. 13

மூதூர் பகுதியில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட செங்கல் சூளை தொழிலாளர்களும் மீள தமது தொழில்களை செய்வதற்கு அரசு உதவ வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

மூதூர் பகுதியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் கார்ணமாக செங்கல் சூளைகளில் இருந்த செங்கற்கள் மற்றும் மூலப்பொருட்கள் என்பன வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டிருப்பதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தமது தொழிலை மீள ஆரம்பிக்க அரசு தமக்கு உதவ வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

மூதூர் பிரதேசத்தில் இருதயபுரம், ஷாபிநகர், ஜின்னாநகர், அம்மன்நகர், மணற்சேனை, நீலாபொல ஆகிய பகுதிகளில் செங்கல் சூளை தொழில் இடம்பெற்று வருகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெறும் கட்டுமானங்களுக்குத் தேவையான செங்கற்களின் பெரும்பகுதி இப்பகுதிகளில் இருந்தே பூர்த்தி செய்யப்படுகின்றன. (எ)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் முன்னேற்ற மீளாய்வு கூட்டம்

திருகோணமலை, டிசெ. 13

திருகோணமலை மாவட்டத்தில் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நான்காம் காலாண்டுக்கான முன்னேற்ற மீளாய்வு கூட்டம் நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

2025 ஆம் ஆண்டின் முதலாம், இரண்டாம், மூன்றாம் காலாண்டுகளில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள், நலன்புரி செயல்பாடுகள் மற்றும் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்துக்கான நிவாரண உதவி நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகள் இக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், எதிர்வரும் காலத்துக்கான செயல் திட்டங்கள் குறித்தும் விரிவான கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

மேலும், பருவமழை பேரழிவுகளுக்கான தற்செயல் ஏற்பாடுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டு, தொடர்புடைய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் ஆராயப்பட்டன. (எ)

# மட்டு. புதுக்குடியிருப்பில் கப் ரக வாகனம் விபத்து

மட்டக்களப்பு, டிசெ. 13

மட்டக்களப்பு- கல்முனை பிரதான வீதியில் புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை கோழி ஏற்றிவந்த கப் ரக வாகனம் ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கோழிகளை ஏற்றிக்கொண்டு மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த குறித்த வாகனம் புதுக்குடியிருப்பு பகுதியூடாக பயணிக்கும் போது வீதியில் நின்ற மாட்டுடன் மோதி குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் சிக்கிய மாடு சம்பவ இடத்தில் உயிரிழந்ததோடு கோழிகளை ஏற்றிவந்த வாகனத்தில் பயணித்தோரும் காயமடைந்தனர்.

இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய...

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் ஆதியவற்றிலும், மீனவர்களால் மகஜர் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்றைய போராட்டத்தில் பங்கேற்ற வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன்,

யாழ். மாவட்ட செயலகத்தில், அரசாங்க அதிபரை சந்தித்து, வட பகுதி மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை, உரிய தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என வலியுறுத்தினார். (அ)

## மாகாணத்...

இலங்கையர்கள் வாக்களிப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்துதல் உள்ளிட்ட தேர்தல் முறைமையொன்றை உருவாக்குவதற்கு விரிவான விவாதங்களை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

இந்த நிலையில், தெரிவுக் குழுவின் அறிக்கை அதன் முதல் கூட்டத் தினத்திலிருந்து மூன்று மாத காலத்துக்குள் அல்லது பாராளுமன்றத்தினால் நீடிக்கப்பட்ட காலத்துக்குள் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை, மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருடத்தில் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மகாவலி...

பிரதேசங்களுக்குத் திருப்புவதே இதன் முதன்மை நோக்கமாகும்.

இந்த மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டத் திட்டம், விவசாயத்துறையின் தாங்குதிறனை வலுப்படுத்துதல் மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதன் மூலம் வடமத்திய மாகாணத்தில் உள்ள 35,600 இற்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு நேரடிப் பயன்களைப் பெற்றுத்தரும் என ஆசிய அபிவிருத்தி வங்கி மேலும் குறிப்பிட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான ஒருங்கிணைந்த இணை நிதியளிப்பு முயற்சிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி தலைமை தாங்குகின்றது.

இதன் மூலம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவிக்கு மேலதிகமாக, சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்திலிருந்து 60 மில்லியன் டொலர்களையும், விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திலிருந்து 42 மில்லியன் டொலர்களையும் திரட்ட எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## விபத்து...

செய்யப்பட்டுள்ளார்.

அசோக ரன்வல ஓட்டிச் சென்ற ஜீப் வாகனமும் கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

சப்புகஸ்கந்த டெனிமல்ல பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7.45 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, காரில் பயணித்த 25 வயதுடைய பெண், அவரது ஆறு மாதக் குழந்தை மற்றும் 55 வயதுடைய தாய் ஆகியோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதில், குழந்தை விசேட சிகிச்சைக்காக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஜீப்பில் பயணித்த பாராளுமன்ற உறுப்பினர் அசோக ரன்வலவும் காயமடைந்து ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அவர் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அசோக ரன்வல மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது 200,000 ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டார். இது தொடர்பான வழக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. (அ)

## வடக்கு...

தொழில்முனைவோராகவும் மாற்றமடைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இலங்கை விவசாயத் தொழில்முனைவோர் மன்றத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாண சேதன விவசாய பொது பட்டியலிடப்படாத மற்றும் அக்ரோ பெனிபிட் லங்கா லிமிடெட் ஆகியவற்றுக்கு இடையிலான முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.

புத்தூரில் அமைந்துள்ள விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வாழை மற்றும் மாம்பழ சேகரிப்பு மற்றும் பதப்படுத்தல் நிலையத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

எமது விவசாயிகள் நீண்ட காலமாக எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினை அவர்களுக்கான முறையான சந்தை வாய்ப்பு இல்லாமையாகும். இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, சந்தை வாய்ப்பை உருவாக்கிக் கொடுப்பதற்காகக் கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகளை நான் முன்னெடுத்து வந்துள்ளேன். அதன் ஒரு முக்கிய அங்கமாகவே இன்றைய இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு அமைந்துள்ளது.

இது ஒரு பரீட்சார்த்தமான மற்றும் முன்னோடியான முயற்சியாகும். இத்திட்டத்தை வெற்றியடையச் செய்வது விவசாயிகளாகிய உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. உற்பத்திப் பொருட்களின் தரத்தைப் பேணுவதன் மூலமும், தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி செய்வதன் மூலமும் இத்திட்டத்தை நாம் அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்ல முடியும்.

இம்முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய இலங்கை விவசாயத் தொழில்முனைவோர் மன்றத்துக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர்கள் இங்கு நேரில் வந்து கள நிலவரங்களைப் பார்வையிட்டு, மிகக் குறுகிய காலத்தினுள் இத்திட்டத்தை ஆரம்பித்துள்ளமை பாராட்டுக்குரியது-என்றார்.

இந்நிகழ்வில் இலங்கை விவசாயத் தொழில்முனைவோர் மன்றத்தின் செயலாளர் கலாநிதி செல்வநாதன் அனோஜன் கலந்துகொண்டு, இத் திட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்துத் தெளிவுபடுத்தினார். அதனைத் தொடர்ந்து இரு நிறுவனங்களுக்கும் இடையிலான ஒப்பந்தம் உத்தியோகபூர்வமாகக் கைச்சாத்திடப்பட்டது. (அ)

# கொலைக் குற்றவாளிக்கு மரண தண்டனை விதிப்பு

நுவரெலியா, டிசெ. 13

நுவரெலியா, கந்தப்பளை பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட ஒருவருக்கு நுவரெலியா மாவட்ட மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

2013 ஆம் ஆண்டு நுவரெலியா-கந்தப்பளை பகுதியில் தனது மனைவியை கூறிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 12 ஆண்டுகளாக விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இந்த நிலையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நுவரெலியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் வீரசூரிய முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குற்றம்சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால், சந்தேக நபர் குற்றவாளி எனக் கண்டறியப்பட்டு, மரண தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

(எ)

## நாட்டில்...

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 30 வீதமானவை மண்சரிவுகள் ஏற்படக்கூடிய பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இவ்வாறு அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களில் நாட்டின் 34 வீதமான மக்கள் தொகையினர் வாழ்கின்றனர்.

இந்த மொத்தப் நிலப்பரப்பின் அளவு சுமார் 20,000 சதுர கிலோமீட்டர்கள் ஆகும். டித்வா சூறாவளியுடன் ஏற்பட்ட அதிக மழைவீழ்ச்சி காரணமாக, மண்சரிவு அபாயம் உள்ள இடங்களைப் பரிசோதிக்குமாறு 2,710 கோரிக்கைகள் கிடைத்துள்ளன.

இவற்றில் இதுவரை 589 இடங்கள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களின் செயற்கைக்கோள் புகைப்படங்கள் மூலம், 10 மீட்டருக்கும் அதிகமாக மண்சரிவு ஏற்பட்ட 1,241 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவற்றில், வீடுகளுக்குப் பாதிப்பு இல்லாத 919 மண்சரிவுகள் மற்றும் வீடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்திய 322 மண்சரிவுகள் பதிவாகியுள்ளன.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்துக்குக் கிடைக்கும் உடனடித் தகவல்களின் அடிப்படையில், 15,000 இற்கும் அதிகமான மக்கள் அபாயகரமான இடங்களிலிருந்து வெளியேறுமாறு பிரதேச செயலகப் பிரிவுகள் ஊடாக அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் தாங்கள் இருக்கும் நிலையைப் புரிந்து கொண்டு, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

அங்கீகரிக்கப்படாத அல்லது வேறுவிதமான வீடுகள், கட்டிடங்களில் வசிப்பவர்கள், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் வழங்கும் ஆலோசனைகளைப் பின்பற்றுவது மிகவும் முக்கியம். முன்னர் ஏற்பட்ட அனர்த்தங்களின் போது பல உயிர்கள் மண்மேடுகள் சரிந்ததாலேயே இழக்கப்பட்டன.

எனவே, பொதுமக்கள் இது குறித்து மிகவும் விழிப்புடன் இருக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார். (அ)

## கிணற்றில்...

முறைப்பாடு செய்யப்பட்டது.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய ஆளுகைக்குள் இருக்கும் அனலைதீவு 5 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் சுப்பையா நளினி என்பவரே குறித்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

நாட்டில் தொடரும் அசாதாரண வானிலையை தொடர்ந்து பெய்துவரும் கனமழை காரணமாக மக்கள் பல்வேறு அவலங்களை சந்தித்து வரும் நிலையில் நீர் நிலைகளும் நிரம்பியுள்ளன.

இவ்வாறு நிகழ்ந்த சம்பவம் குறித்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ

## மனித...

ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விளக்கம் கோரியிருந்தது.

இதன்படி பிரதேச செயலகத்தால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் முறைப்பாட்டாளர் உட்பட்ட 18 வீடுகளுக்கான சேத விவரம் சிபாரிசு செய்யப்பட்டு அரசாங்க அதிபருக்கு நிதி ஒதுக்கீட்டுக்காக அனுப்பப்பட்டுள்ளது என்றும் முறைப்பாட்டாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சமூகமளிக்கும்போது வெள்ள நிவாரணம் தொடர்பான சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப்பிரமணம் என்பவற்றின்படி முறைப்பாட்டாளருக்கான கொடுப்பனவை வழங்கமுடியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் முறைப்பாட்டாளர் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டபோது நேரில் வந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும்படி பிரதேச செயலாளரால் முறைப்பாட்டாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார். (அ)

## இடரில்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் எற்பட்ட இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பினால் மட்டும் போதாது. அவர்கள் தங்கள் முன்னைய நிலையை விடப் பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் மேலோங்கி வர வேண்டும் என்பதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அரசாங்கத்தின் பிரதான இலக்காகும். அதற்காகவே நாங்கள் அர்ப்பணிப்புடன் உழைத்து வருகிறோம்.

அதிக விளைச்சலுக்கு ஆசைப்பட்டு நாம் மண்ணில் கொட்டிய இரசாயன உரங்கள், இன்று அந்த மண்ணை மட்டுமல்ல, நம்மையும் நோயாளிகளாக்கியுள்ளன. ஒரு காலத்தில் அநுராதபுரம், பொலனறுவையில் மட்டுமே அதிகம் காணப்பட்ட சிறுநீரக நோய், இன்று முல்லைத்தீவு, வவுனியா வரை பரவியுள்ளது. இது எமக்கு விடுக்கப்பட்ட மிகத் தெளிவான எச்சரிக்கை மணி. யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற சின்ன வெங்காய விளைச்சல் சில பகுதிகளில் குறைந்து போனதற்கு, மண் தன் வளத்தை இழந்து மலடாகிவிட்டதே காரணம்.

விவசாயிகள் பழைய முறைகளுக்குத் திரும்ப வேண்டியதில்லை. ஆனால் புத்திசாலித்தனமான மாற்றங்களை முன்னெடுக்க வேண்டும். மண்ணைப் பரிசோதித்து, என்ன சத்து தேவையோ அதை மட்டும் இடுங்கள். இது செலவைக் குறைக்கும், மண்ணைக் காக்கும். இரசாயன உரத்துடன் தொழுவுரம், மண்புழு உரம் போன்ற சேதனப் பசளைகளையும் கலந்து பயன்படுத்துங்கள். ஒரே பயிரைத் தொடர்ந்து செய்யாமல், பயறு, உளுந்து போன்ற மண்ணுக்குச் சத்துத் தரும் பயிர்களை மாற்றி மாற்றிப் பயிரிடுங்கள். தொழில்நுட்பம் மற்றும் சொட்டு நீர்பாசனம் மூலம் பயிருக்குத் தேவையானதை மட்டும் துல்லியமாக வழங்குங்கள். இது விளைச்சலை இருமடங்காகப் பெருக்கும்.

வெள்ளம் வடிந்திருக்கலாம், ஆனால் அது உங்கள் வாழ்வில் ஏற்படுத்திய வடு இன்னும் ஆறவில்லை. ஆசையாக வளர்த்த பயிர்களையும், பிள்ளைகள் போல் வளர்த்த கால்நடைகளையும் பறிகொடுத்துவிட்டுப் பலர் நிர்கதியாய் நிற்கிறீர்கள். ஆனால், நான் உறுதியாகக் கூறுகிறேன், நீங்கள் தனித்து விடப்படவில்லை. ஜனாதிபதி தலைமையிலான அரசு உங்கள் துயரை முழுமையாக உணர்ந்துள்ளது. பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உரிய இழப்பீடுகளும், வாழ்வாதார உதவிகளும் மிக விரைவில் உங்களை வந்து சேரும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பேரிடர் பாதித்த பாடசாலைகளை மீட்டெடுக்க "பிரதிஷ்டா" திட்டம்

## வடக்கில் 336, கிழக்கில் 221 பாடசாலைகள் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 13

**பேரிடரால் சேதமடைந்த பாடசாலைகளை மீட்டெடுக்க "பிரதிஷ்டா" திட்டத்தை கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.**

இந்த திட்டத்தின் மூலம் குழு அல்லது தனிநபர் ஒருவர் சேதமடைந்த பாடசாலைகளை மீண்டும் கட்டியெழுப்ப பங்களிக்க முடியும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவேவா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கல்வி அமைச்சின் மூலம் தேவையான அனைத்து ஒருங்கிணைப்புகளையும் மேற்கொள்ள திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் மேலதிக தகவல் தேவைப்படுவோர் அல்லது பங்களிக்க விரும்புவோர், 077 658 2365, 071 993 2325 ஆகிய வட்ஸ்அப் கைபேசி இலக்கங்கள் அல்லது 1988 என்ற பிரத்யேக என்ற அவசர தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொண்டு தகவல்களை பெறமுடியும்.

இதன்படி, இது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் கல்வி அமைச்சின் பேரிடர் மேலாண்மைக் குழுவால் ஒருங்கிணைக்கப்படும்.

நாடு முழுவதும் 1506இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இன்னமும் தரவுகள் சேகரிக்கப்படுகின்ற என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் 330 பாடசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று, கிழக்கில் 221 பாடசாலைகளும் மேற்கு மாகாணத்தில் 266 பாடசாலைகளும் மத்திய, வடமேற்கு மாகாணங்களில் தலா 136 பாடசாலைகளும் ஊவா மாகாணத்தில் 129 பாடசாலைகளும் சப்ரகமுவ மாகாணத்தில் 115 பாடசலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனிடையே, பதுளை மாவட்டத்தில் இரு பாடசாலைகள் அழிவடைந்துள்ளன. (ஐ)

## கர்ப்பவதி பெண்களுக்கு விசேட கொடுப்பனவு

கொழும்பு, டிசெ. 13

கர்ப்பவதி பெண்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான போசாக்கு கொடுப்பனவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பேரிடர் பாதிப்பு, வரவிருக்கும் நத்தார் பண்டிகையை முன்னிட்டே இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

கடந்த நவம்பர் 30ஆம் திகதி வரை தாய் சேய் நல நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட கர்ப்பவதி பெண்களுக்கு ஒரு முறை மட்டும் இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மகளிர், சிறுவர் விவகார அமைச்சின் கீழ் உள்ள முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகத்தின் ஒரு திட்டமாக, இந்தக் கொடுப்பனவு எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் பிரதேச செயலகங்களூடாக விநியோகிக்கப்படவுள்ளது. (ஐ)

# இலங்கை உட்பட பல நாடுகளின் பேரிடர்களுக்கு காடழிப்பும் காரணம்

கொழும்பு, டிசெ. 13

இலங்கை, இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்தில் அண்மையில் ஏற்பட்ட பேரிடர்களுக்கு கடல் வெப்ப நிலை அதிகரிப்புடன், காடழிப்பும் காரணம் என்று புவியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் உலக வானிலை பண்புக்கூறு ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்ட அறிக்கையின்படி, மலாக்கா நீரிணையில் உருவான வெப்பமண்டல சூறாவளியான சென்யார் தென்கிழக்கு ஆசியாவின் பெரும் பகுதிகளை பேரழிவுக்கு உட்படுத்தியது. இந்தோனேசிய தீவான சுமத்ராவில் 969 பேர் உட்பட கிட்டத்தட்ட 1,200 பேர் உயிரிழந்தனர். அங்கு சேதங்களை சீர்செய்ய குறைந்தது 300 கோடி டொலர் நிவாரண நிதி தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் இலங்கையும் அதிகளவில் பாதிக்கப்பட்டது. இறப்பு எண்ணிக்கை 600ஐ தாண்டியுள்ளது. அத்துடன் பொருளாதார இழப்புகள் சுமார் 700 கோடி டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மிகவும் தீவிரமான ஐந்து நாட்கள் மழைப்பொழிவின் போது, வட இந்தியப் பெருங்கடலில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை 1991 ஆம் ஆண்டு முதல் 2020 ஆண்டுக்கான சராசரியை விட 0.2 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தால் புயல்களுக்கு ஏற்படும் பங்களிப்பை ஆராய்ச்சியாளர்களால் துல்லியமாக தீர்மானிக்க முடியவில்லை என்றாலும், உலகளாவிய வெப்பநிலை உயர்வுடன் தொடர்புடைய தீவிர மழைப்பொழிவின் அதிகரிப்பு மலாக்கா நீரிணையில் 9 முதல் 50 வீதமாகவும் இலங்கையில் 28 முதல் 160 வீதமாகவும் இருக்கலாம் என்றும் புவியியலாளர்கள் கூறியுள்ளனர். (ஐ)

## சாரதியின் சாமர்த்தியத்தால் காப்பாற்றப்பட்ட 14 உயிர்கள்

கொழும்பு, டிசெ. 13

பதுளையிலிருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த இ. போ. ச. பேருந்து பிரேக் செயலிழந்ததால் பள்ளத்தாக்கில் விழவிருந்த நிலையில் சாரதி பாதுகாப்பு சுவருடன் பேருந்தை மோதி பயணிகளின் உயிர்களை காப்பாற்றினார்.

நேற்று வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

நேற்று காலை 6.35 மணியளவில் பதுளையிலிருந்து பயணத்தை ஆரம்பித்து பதுளை - மகியங்கனை வீதி ஊடாக பயணித்துக் கொண்டிருந்த போது துன்ஹிந்த வளைவுக்கு அருகில் பேருந்தின் பிரேக் செயலிழந்தது. இதனால், பேருந்தை பாதுகாப்பு சுவரில் மோதி நிறுத்தினேன். அவ்வாறு செய்திருக்காவிடின் பேருந்து ஆயிரம் அடி பள்ளத்தில் கவிழ்ந்து பெரும் விபத்து ஏற்பட்டிருக்கும்", என்று பேருந்தின் சாரதி ஜனக துஷார தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இந்த வீதியில் பல கோர விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதற்கு பிரேக்கில் ஏற்பட்ட கோளாறுகளே காரணம் எனவும் பதுளை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## மண்சரிவு ஏற்படும் அபாயமுள்ள 2,377 இடங்களில் ஆய்வு ஆரம்பம்!

கொழும்பு, டிசெ. 13

மண்சரிவு ஏற்படக்கூடிய நிலையில் அடையாளம் காணப்படும் 2 ஆயிரத்து 377 இடங்களில் ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த இடங்கள் தொடர்பாக 529 இறுதி அறிக்கைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன என்று தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர தெரிவித்தார்.

மண்சரிவு ஏற்படக்கூடிய நிலையில் அடையாளம் காணப்பட்ட இடங்களை ஆய்வு செய்ய 7 மாவட்டங்களில் மொத்தம் 56 ஆராய்ச்சி குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அண்மையில் நிகழ்ந்த பேரிடரால் 1,322 மண்சரிவுகள் பதிவாகியுள்ளன. செயற்கைக்கோள் படங்களைப் பயன்படுத்தி அண்மையில் ஏற்பட்ட மண்சரிவு இடங்களை அடையாளம் காணும் திட்டத்தையும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் ஆரம்பித்துள்ளது. (ஐ)

## ரயில் சேவையில் பெண்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி

கொழும்பு, டிசெ. 13

ரயில் சேவையில் உள்ள அனைத்து பதவிகளுக்கும் பெண்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக சட்டமா அதிபர் நேற்று உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

ரயில் சேவையின் ரயில் நிலைய அதிபர் பதவிகளுக்கு பெண்கள் விண்ணப்பிப்பதைத் தடுத்து வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தலை சவாலுக்கு உட்படுத்தி பெண்கள் இருவர் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, சட்டமா அதிபர் சார்பில் முற்பட்ட அரச சட்டத்தரணி இந்த அறிவிப்பை விடுத்தார். (ஐ)

## தங்கத்தின் விலை மீண்டும் உயர்ந்தது

கொழும்பு, டிசெ. 13

நாட்டில் தங்கத்தின் விலை 3 ஆயிரம் ரூபாயால் நேற்றைய தினம் உயர்வடைந்ததாக நகைக்கடை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

24 கரட் தங்கம் நேற்று 3 ஆயிரம் ரூபாய் உயர்ந்து 3 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாயாக விற்பனையானது.

இதேபோன்று, 22 கரட் தங்கம் 3 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாயாகவும் விற்பனையானது. (ஐ)

## குழந்தை மேம்பாட்டு மையங்களை புனரமைக்கும் திட்டம் ஆரம்பம்!

கொழும்பு, டிசெ. 13

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குழந்தை பருவ மேம்பாட்டு மையங்களை விரைவாக புனரமைப்பதற்கான ஒரு திட்டத்தைத் ஆரம்பிப்பதாக பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பேரிடரால் 784 குழந்தைப் பருவ மேம்பாட்டு மையங்கள் சேதமடைந்தன. இவற்றில் 78 மையங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டன. சேதமடைந்த மையங்களில் புத்தளம் மாவட்டத்தில் 127 மையங்களும் கம்பஹா மாவட்டத்தில் 68 மையங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 63 மையங்களும், மன்னார் மாவட்டத்தில் 48 மையங்களும் அடங்கும்.

இதனிடையே, பேரிடரால் மூடப்பட்டிருந்த குழந்தைப் பருவ மேம்பாட்டு மையங்களை எதிர்வரும் 16ஆம் திகதி முதல் திறக்குமாறும் அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

# மண்சரிவுகளால் மலையகத்தின் புவியியல் அமைப்பில் மாற்றங்கள்

கொழும்பு, டிசெ. 13

டித்வா புயலைத் தொடர்ந்து ஏற்பட்ட மண்சரிவுகளால் மலையகத்தின் புவியியலில் சில பகுதிகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால், நிலப் பயன்பாட்டு வரைபடத் தொடரை மறுசீரமைக்க வேண்டியது அவசியம் என்று நில அளவையாளர் நாயகம் என். கே. யு. ரோஹண தெரிவித்துள்ளார்.

பல பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த மறுவரை படமாக்கல் அவசியமாகிறது. துல்லியமான மறுவரை படமாக்கல் செயல்முறையை ஆதரிக்கும் வகையில், இலங்கை சுற்றிவரும் விண்வெளி நிலையங்களில் இருந்து உயர் தெளிவுத்திறன் கொண்ட செயற்கைக்கோள் படங்களைப் பெற நில அளவைத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இந்தப் புதிய படங்கள், மண்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அடையாளம் காணவும் நதிப் படுகைகள், நிலங்கள் மற்றும் விவசாயப் பகுதிகளில் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடவும் உதவும்.

"சேதம் பெரும்பாலும் புவியியல் நிலப்பரப்பில்தான் ஏற்பட்டுள்ளது. வெளிப்புறப் பகுதிகள் பெரும்பாலும் பாதிக்கப்படவில்லை, ஆனால் சில பகுதிகளில் மீள்குடியேற்றம் தேவைப்படலாம்.

"அடிப்படை செயற்கைக்கோள் படங்கள் இலவசமாகக் கிடைத்தாலும், உயர்தரமான, நெருக்கமான படங்களைப் பெற கணிசமானளவு நிதி தேவைப்படுகிறது. உயர் தெளிவுத்திறன் கொண்ட செயற்கைக்கோள் படங்களைப் பெறுவதற்காக இராஜதந்திர வழிகள் மூலம் சர்வதேச உதவியையும் நில அளவைத் திணைக்களம் நாடியுள்ளது என்றும் ரோஹண கூறியுள்ளார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org